**கொவிட்-19: இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீது கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தைக் குறைக்க எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.**

**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு**

## அறிமுகம்

கொவிட்-19 தொற்றுநோய் உலகளாவிய பொருளாதாரங்களையும், பில்லியன் கணக்கான மக்களின் ஆரோக்கியத்தையும் பாதித்துள்ளதுடன்,இணையற்ற அளவில் சமூக நடத்தைகளையும் மறுவரையறை செய்துள்ளது. நாடுகளிலும் உலகெங்கிலும் உள்ள தொழிலாளர் சந்தைகளின் தாக்கம் கூர்மையாக உள்ளது. நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களது ஊதியங்கள் குறைக்கப்பட்டுப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர், அல்லது அவர்களது வீடுகளுக்குத் திரும்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது சொந்த நாடுகளுக்குச் செல்லப் பணிக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் பணிபுரியும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின் பாதுகாப்பு இல்லாமை, சுகாதாரப் பாதுகாப்புக் கிடைக்காமை மற்றும் பாதுகாப்பான வாழ்க்கை நிலைமைகளுக்கான அணுகலின்மை ஆகியவற்றின் அடிப்படையில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். 1.8 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுகின்றனர். இத்தொழிலாளர்கள் 2019ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு 6.7 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பங்களித்தனர்.[1] ஒவ்வொரு 11 வீடுகளிலும் ஒருவர் சர்வதேச பணம் அனுப்புவதையும், புலம்பெயர்ந்தோர் பொதுவாக ஒரு மாதத்திற்கு ஒரு முறை பணம் அனுப்புவதையும், மாதத்திற்குச் சராசரியாக ரூ. 40,000 அனுப்பப்படுவதையும் மதிப்பீடுகள் எவ்வாறு காட்டுகின்றன என்பதை சமீபத்திய ஆய்வு விவரங்கள் தெரிவிக்கின்றன.[2]

இத்தொற்றுநோய் பல புலம்பெயர்ந்த தொழிலாளர் இடங்கள் மூடப்படுவதற்கு வழிவகுத்துள்ளது, இது இத்தொழிலாளர்களது சம்பாதிக்கும் திறன் மற்றும் வாழ்க்கை நிலைமைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் இரண்டு நிலைகளில் தாக்க விளைவுகள் உடனடியாக இருந்தன: ஒன்று தேசிய பொருளாதாரத்திற்கான அந்நியச் செலாவணி வருவாயின் கடுமையான வீழ்ச்சி மற்றும் மத்திய கிழக்கில் பணிபுரியும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து பணம் அனுப்புவதை நம்பியவர்களின் குடும்பங்களின் வருமானம் என்பனவாகும்.[3]நாடுகளில் தொற்றுநோய் பரவியுள்ள நிலையில், ஏனைய நாடுகளில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்கள் மற்றும் இலங்கையில் உள்ள அவர்களது குடும்பங்கள் இப்போது நெருக்கடியின் விளைவாக வறியவர்களாக மாறும் அபாயத்தில் உள்ளனர்.

இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பான முக்கிய கரிசனைகளை இக்கொள்கை சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றது. இதிலே

[1]http://www.ips.lk/talkingeconomics/2020/04/17/covd-19-and-foreign-exchange-woes-can-sri-lanka-find-a-way-out/

[2]http://www.ips.lk/talkingeconomics/2020/04/17/covd-19-and-foreign-exchange-woes-can-sri-lanka-find-a-way-out/

[3]https://www.cbsl.gov.lk/en/news/the-government-and-the-central-bank-of-sri-lanka-introduce-furthermeasures-to-preserve-the-foreign-currency-reserve-position-of-sri-lanka

இலங்கையில் குடியேறியவர்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எடுக்க வேண்டிய முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளன.

<u>இலங்கை அரசாங்க இடையீடுகள்</u>

ஏப்ரல் 2020 நடுப்பகுதியில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் (SLBFE) இலங்கை வெளிவிவகார அமைச்சானது,பஹ்ரைன்,குவைத்,ஜோர்டான், லெபனான், ஓமான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார்,ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் காணொளி ஊடான உரையாடலை நடத்தியது.[4] வேலையின்மை தொடர்பான வழக்குகள் அதிகரித்தல், ஒப்பந்தங்களை இழத்தல், பணி அனுமதிகளை நீட்டிக்காதது, தற்காலிக சுயாதீன வேலையை நிறுத்துதல் போன்ற பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டன. இலங்கையில் உள்ள குடும்பங்களின் வாழ்க்கை நிலைமைகளின் தாக்கம் அங்கீகரிக்கப்பட்டது.

**இந்த உண்மைகள் இருந்தபோதிலும்கூட, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சீனா மற்றும் தெற்காசியாவிலிருந்து பல்கலைக்கழகங்களில் பதிவுசெய்யப்பட்ட முத்தரப்புப் படைகளின் உறுப்பினர்களையும், பயிற்சி பெறும் மாணவர்களையும் திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்தது.**

மார்ச் 2020இல் தொற்றுநோய் பரவ ஆரம்பித்ததில் இருந்து வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை (OSL) திருப்பிக்கொண்டு வருவது தொடர்பாக வெளியுறவு அமைச்சின் ஊடாகஇலங்கை அரசாங்கம் பலவாறான தலையீடுகளில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கம் இலங்கையைத் தொடர்பு கொள்ளுங்கள்(Contact Sri Lanka)" என்ற இலங்கைக்குத் திரும்ப விரும்பிய OSL திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் திட்டமிடப்படுவதற்கு தங்கள் விவரங்களைப் பதிவு செய்ய ஏதுவாக 26 மார்ச் 2020 அன்று இணையத்தளம் ஒன்றை அறிமுகம் செய்தது. 29 மே 2020 வரையான காலப்பகுதியில், 123 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 42,000 பேர் இதிலே பதிவு செய்திருந்தனர். அதில் 34,881 பேர் புலம்பெயர்ந்த தொழிலாளர்களில் 20,893 பேர் மத்திய கிழக்கில் வாழ்ந்து, வேலை செய்பவர்களாவர்.[5]

இலங்கைப்புலம்பெயர் தொழிலாளர்கள் பெருமளவில் நாடு திரும்பக் கோரியபோதிலும், இத்தொழிலாளர்கள் இலங்கைக்குத் திரும்புவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. மே மாத நடுப்பகுதியில், செல்லுபடியாகும் பணி விசாக்கள் உள்ளவர்கள் திரும்புவதற்கான கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வெளியுறவு அமைச்சுக்கூறியது. மாறாக, விசா இல்லாதவர்களுக்கு, இலக்கு நாட்டில் சட்டவிரோதமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக இருப்பவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முயற்சிக்கும். ஏனெனில் அவர்களுக்குச் சுகாதார வசதிகள் கிடைக்க வாய்ப்பில்லை.[6]இந்நேரத்தில் ஊதியம் வழங்காமை, ஊதியங்களைக் குறைத்தல், தேவையான சுகாதார வசதி கிடைக்காமை மற்றும் ஏப்ரல் மாதத்தில் இலக்கு நாடுகளில் உள்ள தூதரகங்களால் எடுத்துக் காட்டப்பட்ட நெருக்கடிகள் என்பவற்றால் அதிகரிக்கும் நிதி இடை!றுகளை எதிர்கொள்ளும் தமது நாட்டு மக்களின் துன்பத்தை அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு புறக்கணிக்கின்றது. அதற்குப் பதிலாக சிறு வருமானம் அல்லது வருமானம் இன்றி வெளிநாட்டில் இருக்கும் சிக்கலை அங்கீகரிக்கின்றது அல்லது மேற்குறிப்பிட்ட

[4] https://www.mfa.gov.lk/foreign-ministry-and-slbfe-assist-sri-lankans-in-the-middle-east/
[5] https://www.mfa.gov.lk/reassures-continued-repatriation/
[6] https://www.mfa.gov.lk/osls-to-rethink-repat/



Women and Media Collective
Established 1984

பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காமல், தங்கியிருப்பவர்களுக்கு "உலர் உணவுகளை மற்றும் தேவையான மருந்துகளை வழங்க அரசாங்கம் முயற்சிக்கும்" என அரசாங்கம் தெரிவித்தது.[7]

ஏப்ரல் 2020இல் செல்லுபடியாகும் விசார இல்லாத இலங்கைத் தொழிலாளர்களுக்கு மன்னிப்பு வழங்கி மீளச்செல்வதற்குப் பதிவு செய்யுமாறு குவைத் அரசாங்கம் அறிவித்திருந்தது. சுமார் 100,000 பேரில் 500இற்கும் குறைவானவர்கள் அவ்வாறு செய்துள்ளனர். ஏப்ரல் மாதம் நாட்டில் விமான நிலையம் ”ட்டப்பட்டதால் இலங்கை வான்வெளி உள்வரும் விமானங்கள் நிறுத்தப்பட்டன. ஆனாலும், மே மாத நடுப்பகுதியில் குவைத் அரசாங்கம் 460 இலங்கையர்களை நாட்டிற்கு திருப்பி அனுப்பியிருந்தது.[8]அவர்கள் திரும்பி வந்து இலங்கையில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு மாற்றப்பட்டபோது, திரும்பி வந்தவர்களில் 412 பேர் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர்

<u>தனிமைப்படுத்தல் நிலையங்கள்: முப்படைகள் எதிர் இலங்கை அரசாங்கத்தின் சுகாதார சேவைகள்</u>

தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சில வாரங்களுக்குள் திரும்பி வருபவர்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை அமைக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசாங்கம் விரைவாக உணர்ந்தது. எவ்வாறாயினும், இத்தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை அமைப்பது அல்லது இயக்குவது சுகாதார அமைச்சகம் அல்ல,இலங்கை இராணுவம் என்பது கவலைக்குரியது. சுகாதார அமைச்சின் பிரதிநிதிக்கு மாறாக, தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் திரும்பி வருபவர்களின் எண்ணிக்கையின் சுகாதார நிலைமைகள் குறித்து இலங்கை இராணுவத் தளபதி அறிக்கைகளை வெளியிடுகிறார். இலங்கை முத்தரப்புப் படைகளே தேவையான இரண்டு வார கால தனிமைப்படுத்தலை முடித்தவர்களுக்கு வழங்கப்படும் அனுமதிச் சான்றிதழ்களில் விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது,முத்தரப்புப் படைகள் 44 தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை நடாத்தி வருகின்றன. இதில் 4386 நபர்கள் மதிப்பீடுகளுக்கு உட்பட்டுள்ளனர்.[9] தெற்காசியாவிலிருந்து இலங்கையர்களைத் திருப்பி அனுப்புவதில் கவனம் செலுத்துவது பிராந்தியத்தில் இராணுவப் பயிற்சியினைப் பெற்ற முத்தரப்புப் படைகளின் உறுப்பினர்கள் மீது தீவிரமாக கவனம் செலுத்தியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் பரவியுள்ள கொவிட்-19 இன் நிர்வாகத்தில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. ஒன்று, வைரசால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும், அறிகுறியற்றவர்களுக்கும், பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்புத் தேவைப்படுபவர்களுக்கும் சிகிச்சையளிக்கும் நாட்டின் சிறந்த சுகாதார சேவைத் துறையின் அடிபணிந்த பாத்திரமாகும். மற்றொன்று, குறிப்பாக நாட்டின் பொருளாதாரத்தின் அத்திவாரமாக இருக்கும் அந்நியச் செலாவணியை வழங்கும் மத்திய கிழக்கில் பணியாற்றும் 'ரட்ட விருவோ' புலம்பெயர் தொழிலாளர்களை முத்தரப்புப் படையினரின் உறுப்பினர்களுடன் ஒப்பிடுவதாகும்.[10]

---

[7]https://www.mfa.gov.lk/osls-to-rethink-repat/

[8]https://www.mfa.gov.lk/repatriation-from-kuwait/

[9]https://alt.army.lk/covid19/content/4386-persons-are-still-quarantine-44-island-wide-qcs-nocpco

[10]https://alt.army.lk/covid19/content/4386-persons-are-still-quarantine-44-island-wide-qcs-nocpco'இந்த மாலைக்குள் (1600),கடற்படையினரிடையே மேலும் 05 புதிய கொவிட்-19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.இதற்கிடையில், மேலும் 04 கடற்படையினர்இன்று (14) மருத்துவமனைகளை விட்டு வெளியேறினர். தற்போதைய நிலவரப்படி, மொத்தம் 882 கடற்படையினர் கொவிட்-19 வைரஸ் தொற்றுக்கு

மீளத்திரும்பக் கோரும் இலங்கையர்களுக்கான பீ.சீ.ஆர் பரிசோதனைகள்

திருப்பி அனுப்ப விரும்பும் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு இலங்கை அரசாங்கம் கோரும் கோரிக்கைகளில் ஒன்று, தங்கள் நாடுகளை விட்டு வெளியேறுவதற்கு முன்பு இலவச பி.சி.ஆர் சோதனைகளை நடத்துவதாகும். மே மாதம் 466 இலங்கையர்களை திருப்பி அனுப்பியபோது குவைத் அரசாங்கம் இக்கோரிக்கையை நிராகரித்தது. 2020ஆம் ஆண்டு ஜான் மாதம், லெபனான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்) அரசாங்கங்கள் திருப்பி அனுப்பப்படவுள்ள இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குச் செலவு இல்லாமல் இச்சோதனையை நடத்த இப்போது ஒப்புக் கொண்டுள்ளன.[11]

புலம்பெயர் தொழிலாளர்களுக்குச் சிக்கலான வாழ்க்கைச் சூழல்

சாதாரண தொழிலாளர்கள் மற்றும் ஆவணமற்ற புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நிலைமை தொடர்ந்து கவலை அளிக்கிறது. தங்குமிடம், உணவு, குழந்தைகளுக்கான பள்ளிப்படிப்பு, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான வாடகைக்குப் பணம் செலுத்திய நிலையான மாத வருமானத்தைப் பெற்ற பல சாதாரண தொழிலாளர்களின் சம்பளம் வெகுவாகக் குறைந்துள்ளன. இதன் பொருள் என்னவென்றால், அவர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவை தங்கள் குடும்பங்களுக்குச் செலுத்த முடியாது. நீண்ட கால முடக்கம் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கான அவர்களின் திறனைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது.

ஆவணமற்ற அல்லது பதிவு செய்யப்படாத புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தான குழுக்களில் ஒன்றாக மாறிவிட்டனர். முடக்கம் மற்றும் பணிநீக்கங்களைச் செயற்படுத்துவதன் மூலம், இத்தொழிலாளர்கள் உணவு அல்லது உறைவிடத்திற்குச்செலுத்த எந்த வருமானமும் இல்லாமல் மிகவும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். இலங்கைத் தூதரகங்கள் தங்களுக்குத் தங்குமிடம் வழங்க முடியாத நிலையில் சிலரை முகாம்களில் தங்கவைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வளைகுடா நாடுகளில் கர்ப்பமாக இருக்கும் பெண்களின் நிலைமைகள் குறித்த அறிக்கைகள் அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளின் தீவிர நிலைமைகளை வெளிப்படுத்தியுள்ளன.[12]சிக்கித் தவிக்கும் அல்லது திரும்பி வரமுடியாத புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உலர் உணவு போன்ற சில நாடுகளில் ஆதரவை வழங்கும் திட்டத்தை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது.[13] தற்போதைய சூழலில் இது பாராட்டத்தக்கது என்றாலும், இது ஒரு குறுகிய கால நடவடிக்கையாக அங்கீகரிக்கப்பட வேண்டும், இது ஒரு சில நாடுகளில் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மட்டுமே அடைகிறது. சிறப்பு மன்னிப்பு[14] மூலம் இலங்கையர்களின் விசா நிலையை ஒழுங்குபடுத்துவதற்கு இத்தாலி அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு அரசாங்கம் வந்துள்ளது என்பதையும் நாங்கள் கவனிக்கிறோம். வேலைவாய்ப்புக்காக குடியேறிய இலங்கையர்கள் சட்ட ஆவணங்கள் இல்லாமல் இருக்கும்

---

உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.https://www.mfa.gov.lk/ta/4339-promotional-seminar-on-remittances-organised-for-the-sri-lankan-migrant-community-in-israel/

[11]https://www.mfa.gov.lk/lebanon-free-pcr-tests/

[12]https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/textview; மேற்கு ஆசியாவில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தாய்மார்களின் உதவிக்கானஉண்மையான அழுகுரல்கள். 14 ஜான் 2020.

[13]https://www.mfa.gov.lk/foreign-ministry-and-slbfe-assist-sri-lankans-in-the-middle-east/

[14]https://www.mfa.gov.lk/sri-lanka-missions-facilitate-to-regularise-visa-status-of-sri-lankans-in-italy-under-special-amnesty/

பிற நாடுகளில் இத்தகைய தொழிலாளர்களின் நலனுக்காக இத்தகைய விவாதங்கள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>மீள்திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்கள்</u>

தற்போது,குறைந்தது 50,000 புலம்பெயர்ந்த தொழிலாளர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்கள்தொகையில் பெரும் பகுதியினரின் வாழ்க்கைத் தரங்களுக்குப் பங்களிப்புச் செய்த இத்தொழிலாளர்களுக்கு நாடு என்ன கொடுக்க முடியும் என்பது குறித்த குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளுக்கான கொள்கைகளை வகுத்தல் மற்றும் செயற்படுத்துதல். இணையற்றது.

கட்டாயப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடிந்தபின்னர் தங்கள் கிராமங்கள், நகரங்கள் மற்றும் வீடுகளுக்குத் திரும்பும் நபர்களை சமூக ரீதியாக ஒதுக்கி வைப்பது பற்றிய ஆபத்தான அறிக்கைகள் வெளி வருகின்றன. இந்நபர்கள் பெரும்பாலும் எந்தவொரு தொற்றுநோய்களிலிருந்தும் மருத்துவ ரீதியாக அழிக்கப்பட்டவர்கள் அல்ல, மாறாக வைரஸை சுமந்து செல்லும் நபர்கள் மற்றும் சமூகத்திற்கு ஆபத்து என்று கருதப்படுகிறார்கள்.

இவ்வாண்டு காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கான வாய்ப்புடன், சமூகத்தில் அவர்களின் நல்வாழ்வையும், நாட்டிற்குள் வேலை வாய்ப்புகளையும் அரசாங்கம் முன்கூட்டியே உறுதிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கடுமையாகப் பரிந்துரைக்கிறோம். கொவிட்-19 தொற்றுநோய் சில மாதங்களுக்குள் குறையாது. இது நாட்டின் அனைத்துக் குடிமக்களின் ஆரோக்கியத்திற்கும் வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கும் ஒரு முக்கியமான காரணியாக இருக்கக்கூடும்.

<u>எதிர்காலத்திற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள்</u>

புலம்பெயர்ந்த தொழிலாளர்களைத் திருப்பிக்கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை நாங்கள் அங்கீகரித்துப் பாராட்டுகிறோம்.[15] தென்கொரியா, தேயிலைக்கான புதிய சந்தைகள் மற்றும் பாதுகாப்புக்கவசங்களுக்கான சந்தைகள் போன்ற புதிய வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடங்கியுள்ளது.[16] அதேநேரத்தில், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கைக் குடிமக்களின் உரிமைகளையும் அரசாங்கம் மதிக்கிறது என்பதும் முக்கியம். இத்தொற்றுநோய்க்கு மத்தியில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் தற்போதைய வேலைவாய்ப்பை இழக்கலாமா என்பதைப் பொருட்படுத்தாமல் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதில் முன்னுரிமை இருக்க வேண்டும். மே மாதத்தில் ஆசிய நாடுகளில் இருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிச் செல்லும் விமானங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன, எடுத்துக்காட்டாக குவைத்திலிருந்து, பின்னால் விடப்படுபவர்களின் நிலைமை குறித்து மீண்டும் கவலைகளை எழுப்புகிறது. திரும்பி வருவது தாமதமாகி வரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சேவைகள் எவ்வாறு

---

[15] https://www.mfa.gov.lk/media-release-7-5-2020/; https://www.mfa.gov.lk/repatriation-from-kuwait/; https://www.mfa.gov.lk/reassures-continued-repatriation/

[16] https://www.mfa.gov.lk/foreign-secretary-outlines-role-missions-tackling-covid-19-pandemic/; https://www.mfa.gov.lk/foreign-minister-discusses-repat-and-new-job-opportunities/

பலப்படுத்தப்படலாம்? வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான வருவாய் குறித்த தகவல்களுக்கு என்ன அணுகல் உள்ளது? திரும்பி வரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பெற நாட்டில் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை அரசாங்கம் அதிகரிக்குமா? திரும்பி வருபவர்களின் உள்நாட்டு வேலைவாய்ப்புக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

கொவிட்-19 தொற்றுநோயால் வெளிவரும் பிரச்சினைகளுக்கு உடனடிப் பதில்களாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளாக நாங்கள் பின்வரும் பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு வழங்குகிறோம். பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஒரு வழியாக, தேவையான நடவடிக்கைகளுக்காகச் சிவில் சமூகம் முன்வைக்கும் பரிந்துரைகள் பின்வருமாறு:

**<u>பரிந்துரைகள்: இலங்கை அரசாங்கம்:</u>**

1. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இருதரப்பு ஒப்பந்தங்கள் ஊழியர்களுக்கு முதலாளியின் ஒப்பந்தக் கடமைகளைப் பாதுகாப்பதன் மூலம் கௌரவிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

2. இலங்கைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தில் உள்ளவர்கள் அல்லது ஏற்கனவே வேலை இழந்தவர்கள் அல்லது இக்குறைகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் கணக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

3. பாதிக்கப்படக்கூடிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வருமானப் பற்றாக்குறை, போதுமான சுகாதார வசதி மற்றும் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களை மீறுதல் ஆகியவற்றால் நாடு திரும்பக் கோரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மனித உரிமைகள் மற்றும் சுய மரியாதையைப் பாதுகாத்தல்.

4. அனைத்து இலங்கை ஊழியர்களுக்கும் சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்ய வேலைவாய்ப்பு நாடுகளுடன் ஆக்க"ர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுதல்

5. கடத்தல் சம்பவங்களின் சாத்தியக்கூறுகளைத் தணிக்க, குறிப்பாகச் செல்லுபடியாகும் விசாக்கள் இல்லாதவர்களிடையே, வேலைவாய்ப்பு நாடுகளுடன் ஆக்க" ர்வமான உரையாடலில் ஈடுபடுதல்.

6. தொற்றுநோயால் நாடு திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு மீளத் திரும்புவதற்கு விரும்பாத அல்லது திரும்ப முடியாதவர்களின் சமூக-பொருளாதார மறுசீரமைப்பிற்கான திட்டங்களை வகுக்கத் தொழிலாளர், சமூக நலன், பொருளாதார விவகாரங்கள், பெண்கள் விவகாரங்கள்,விவசாயம், சிறு தொழில்கள் போன்ற அமைச்சுகளுக்குள் சிறப்பு வழிமுறைகளை அமைப்பதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை வகுத்தல்.

7. இலங்கையில் உள்ள வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்ற புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதை விரைவுபடுத்துவதற்கான ஒரு திட்டத்தை முன்வைத்தல்.

8. வேலையிழப்புக் காரணமாக அல்லது சம்பளம் கிடைப்பதில் நீண்ட தாமதம் காரணமாக வெளிநாடுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் நிதியை அனுப்புவதில் நீண்ட காலத்தாமதம் காரணமாக நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ளும், புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் சார்புடைய குடும்பங்களுக்கான வேலைத்திட்டங்களை வடிவமைத்தல்.இந்த திட்டங்கள் வீடுகளுக்கான வாடகை அல்லது இக்குடும்பங்களின் சுயதொழில் நிறுவனங்களுக்கான கடன்கள் போன்ற நிதிச் சுமைகளைக் குறைக்கவோ அல்லது இல்லாது செய்யவோ தொடங்கப்படலாம்.

9. கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகளை நிறைவு செய்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் களங்கம் மற்றும் ஓரங்கட்டப்படுதலைத் தடுக்க ஊடகங்கள் மூலம் ஆக்க" ர்வமான சமூக உரையாடலைத் தொடங்கத் தலையிடுதல்.

10. தற்போது சட்ட ஆவணங்கள் இல்லாத இலங்கைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு விசாக்களை ஒழுங்குபடுத்துவதற்கான பொது மன்னிப்புக் காலத்தை வழங்க இலக்கு நாடுகளுடன் செயலில் ஈடுபடுதல்.